## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 220 /2021 -- P.W. 6 / LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தனலெட்சுமி | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. ராமு | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 28.09.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது கர்ணாவூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா 1 ,2 ஐ எனக்கு தெரியும். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்கு தெரியும். 07.01.2021 ஆம் தேதி இரவு 7 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது பன்னீர் வீட்டில் வந்து வீரக்குமார் மற்றும் கண்ணையன் ஆகியோர்கள் வந்து பன்னீர்செல்வத்தை கட்டையால் அடித்தார்கள்.

2) அதே கட்டையால் அரவிந்தையும் அடித்தார்கள். காயம்பட்ட இருவரையும் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். இது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகாரின்அடிப்படையில் போலீசார் விசாரிக்க நடந்த விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) கர்ணாவூர் மேலத்தெரு என்பது கிழக்கு மேற்கான தெரு என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து பன்னீர்செல்வத்தின் வீடு 3 வீடுகள் மேற்கே தள்ளி உள்ளது. அரவிந்த் வீடு பன்னீர்செல்வத்தின் வீட்டிலிருந்து 5 வீடுகள் தள்ளி உள்ளது. சண்டை நடந்த அன்றே இரவு 8 மணிக்கு போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) கணேசமூர்த்திக்கும், கணேசமூர்த்தி சித்தப்பாவுக்கும் இடத்தகராறு என்றும் எனது பையன் கூட்டத்துக்கு போகல . 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகனும் 10 பேரும் எங்கள் வீட்டுக்கு வந்து ஏன் கூட்டத்துக்கு வரவில்லை என்று கேட்டார்கள். தெருவில் அடிக்கடி பிரச்சனை வந்ததால் நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில்

சேர்ந்து விட்டோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி கட்சிக்கு தனசேகரன் என்பவர் தலைமையில்தான் சென்றோம். நான் சம்பவத்தை பொருத்து போலீசாரிடம் இருவேறு கட்சியை சேர்ந்தவர்கள் என்று கூறினேனா என்றால் ஆம், கூறினேன்.

3) என்னை விசாரித்தபிறகு , ஜானகியை விசாரித்தார்களா என்றால் ஆம், விசாரித்தார்கள். கண்ணையனும், கண்ணையன் மகனும் யாரையும் அடிக்கவில்லை என்றாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக போடப்பட்ட பொய் வழக்கில் நான் சார்ந்த கட்சிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) பன்னீர்செல்வத்திற்கு ஒரு கூரை வீடு உள்ளது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 220 /2021 -- P.W. 7 / LW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **முத்துக்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. **பன்னீர்செல்வம்** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 28.09.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது கர்ணாவூரில் குடியிருந்து லாரி கிளீனராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சிக்கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 10.01.2021 ஆம் தேதி காலை 8 மணிக்கு மன்னார்குடி போலீசார் பன்னீர்செல்வம் வீட்டுக்கு வந்து விசாரித்தார்கள், வரைபடம் வரைந்தார்கள், என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். **பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :_குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) இவ்வழக்கில் புகார்தாரர் எனது தந்தை ஆவார். நான் முதன் முதலில் போலீசார் என்னை விசாரிக்கும்போது நீதிமன்றத்தில் சொன்ன விஷயங்களைதான் சொன்னேன்.

2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று நான் ஊரில் இல்லை. இந்த வழக்கில் எனது அப்பா புகார்தாரர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரான கண்ணையன் என்பவரை கைது செய்யவேண்டும் என்று நாங்கள் மறியலில் ஈடுபட்டோம் என்றால் சரியல்ல. வேறு ஒரு வழக்கில் கைது செய்ய மறியல் செய்தோம்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.